www.tamilarangam.net


# அறவழி
# NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாதமொருமுறை 1986 ஆவணி பக்கம் 8 விலை 1-50 வழி 4


## "கிராம சுயராஜ்ஜியத்தினை ஏற்படுத்தி சுயாளுகைக்கு எம்மை நாமே தயார் படுத்துவோம்!"

இனவிடுதலைக்கான ஈழத்தமிழ் மக்களின் சுதந்திரப்போராட்டம் மிகவும் கூர்மையடைந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில், வட, கிழக்கு மாகாணங்களில் இருக்கக்கூடிய அத்தனை கிராமங்களிலும் சுயராஜ்ஜியத்தினை ஏற்படுத்திக்கொள்வதற்கான வேலைத்திட்டங்களை தமிழ் மக்களின் முன்னேற்றம், அபிவிருத்தி, வளர்ச்சி, மாறுதல் கருதிப் பணியாற்றுகின்ற ஸ்தாபனங்கள், சமூகசேவையாளர்கள், காலதாமதமின்றி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என அறவழி பொது வேண்டுகோள் விடுக்கின்றது.

தன்னிறைவுள்ள கிராம சுயராஜ்ஜியமே சுயாளுகைக்கு வழிகாட்டும். சுதந்திரமிக்க கிராம சுயராஜ்ஜியத்தினை உருவாக்க தமிழ் மக்கள் தமது கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்தக்கூடிய வகையில் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் மத்தியிலே, இவர்களது ஒத்துழைப்பு, பங்களிப்பு, ஈடுபாட்டினை உருவாக்கிக்கொள்வது மிக அவசியமாகும்.

கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் உற்பத்தி, விநியோகம் நுகர்வு ஆகிய பிரதான மூன்று அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்படுதல் மூலமும் மக்கள் யாவரும் ஒருவரையொருவர் விளங்கிக்கொள்ளும் தன்மையிலும் உண்மை அறவழிக் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதன்மூலம் உண்மைச்சிந்தனை, சொல்—செயல், விசுவாசம், நம்பிக்கை போன்ற அகிம்சைக் குணங்களைப் பின்பற்றுவதன் மூலமும்—ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளை தானே நிறைவு செய்யக்கூடிய வகையிலும் செயல்பட்டு கிராம சுயராஜ்ஜியத்தினை ஏற்படுத்தப் பாடுபடல்வேண்டும் என அறவழி விரும்புகின்றது.

## சர்வதேச கல்வியூட்டல் தினம்

சர்வதேச கல்வியூட்டல் தினத்தினை முன்னிட்டு அறவழிப்போராட்டக் குழுவும்—யாழ். கல்வித்திணைக்களமும் இணைந்து சாவகச்சேரி கல்வி வட்டாரத்தில், கருத்தரங்கு, ஆய்வு, கையொப்பம் வைக்கப் பழகுதல் போன்ற செயல்பாடுகளை செப்தெம்பர் மாதம் 8-ம் திகதி நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

## பயிற்சி முகாம்

அறவழி பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான இரண்டாம் கட்டப்பயிற்சி முகாம் ஆகஸ்ட் 12 முதல் 15 வரை, கைதடி நவீல்ட் பாடசாலையில் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி முகாமில் சுமார் 30 ஆசிரியைகள் பங்கு கொண்டனர். இவர்களுக்கான முதலாம் கட்டப்பயிற்சி கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்றது

● உள்நாட்டு மூலப் பொருட்களை உற்பத்திக்கு பயன்படுத்துக!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகதிகள் முகாமிற்கு உதவியோர்

கிளிநொச்சி, திருமலை போன்ற இடங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள், இன ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாக, அங்கிருந்து வெளியேறி யாழ் மாவட்டத்துக்கு வந்த மக்களுக்காக அறவழிப் போராட்டக் குழுவினல் கைதடி வெளிக்கள நிலையத்தில் நடாத்தப்படுகின்ற அகதிகள் முகாமிற்கு உதவியோர் பட்டியல்.

| | | | |
|---|---|---|---|
| சமரபாகு பாலர் பாடசாலை பி. | | ரூபா | 615-00 |
| சு. சரோஜினிதேவி | கைதடி | ரூபா | 25-00 |
| ந. பற்குணதேவி | கைதடி | ரூபா | 10-00 |
| வே. மஞ்சுளாதேவி | கைதடி | ரூபா | 10-00 |
| பி. மதிவதனு | ஊரெழு | ரூபா | 55-00 |
| சற்றடேறிவூயூ யாழ்ப்பாணம் | | உணவுப்பொருள்-மருந்து | |
| சர்வோதயம் | யாழ், | பால்மா | |
| வர்த்தக நிலையங்கள் | கைதடி | உணவுப்பொருள் | |
| மரக்கறி வியாபாரிகள் | கொடிகாமம் | ,, | |
| மரக்கறி வியாபாரிகள் | சாவகச்சேரி | ,, | |
| வே. சுகுணேஸ்வரி | கைதடி | ,, | |
| நா. அருள்ஜயா | கைதடி | ,, | |
| நா. முருகதாஸ் | கைதடி | ,, | |
| அறவழி பாடசாலை | மட்டுவில் | ,, | |
| இ. பண்டாரம் | கைதடி | ,, | |
| யெ. சிவஞானேஸ்வரி | கைதடி | ,, | |
| யே. கதிர்காமநாதன் | கைதடி | ,, | |
| எஸ். சிவகுமார் | நாவற்குளி | ,, | |
| ஜ. சிவராஜா | மறவன்புலவு | தேயிலை | |
| ஏ. செல்லாச்சி | கைதடி | உடை | |
| யோ. அன்ரன் | மறவன்புலவு—மெழுகுதிரி. | | |
| குருசாமிக்குருக்கள் | கைதடி | உணவுப்பொருள் | |
| சி. பொன்னையா | ,, | ,, | |
| சு. கந்தையா | ,, | ,, | |
| நா. கந்தையா | ,, | ,, | |
| ந. கந்தையா | ,, | ,, | |
| ப. கந்தையா | ,, | ,, | |
| க. சந்திரசேகரம் | ,, | ,, | |
| தா. நாகமணி | ,, | ,, | |
| கே. எஸ். கணபதிப்பிள்ளை | ,, | ,, | |
| ச. தவீந்திரராசா | ,, | ,, | |
| மா. நாகமுத்து ஜே. பி. | ,, | ,, | |
| க. துரைசிங்கம் | ,, | ,, | |
| இலங்கை வங்கி | சாவகச்சேரி | ,, | |
| கா. தம்பிமுத்து அன்ரன் | கைதடி | ,, | |
| எஸ். பி. மார்க்கண்டு | கச்சாய் | ,, | |
| சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் | சாவகச்சேரி | ,, | |
| அறவழி பாலர் பாடசாலை | சரசாலை | ,, | |
| அ. த. க. பாடசாலை | கைதடி-நுணுவில் | ,, | |
| சேகர் இன்ஸ்ரிரியூட் | கைதடி | உணவு, உடை | |
| எஸ். தங்கராசா | கைதடி | உணவு | |
| சோமஸ்கந்தா சனசமூக நிலையம், | மட்டுவில் | உணவுப்பொருள் | |
| க. தம்பிராசா | கைதடி | ,, | |
| பொதுமக்கள் கடை | நாவற்குளி | ,, | |
| கிராமிய தொழிலாளர் சங்கம் | சாவகச்சேரி | உணவுப்பொருள் | |
| வளர்மதி ச. ச. நிலையம் | மட்டுவில் | உணவுப்பொருள் | |
| தாரகை இளைஞர் மன்றம் | ஊரெழு | உணவு, உடை | |

## வாழ்த்துகின்றேன் வாழ்க

அறவழி நின்று சேவைசெய்யும்
அருமையான தாபனமே
வறுமை ஒழிக்க வழிசெய்யும்
திறமைமிக்க சபையோரே!

பாலர் எமக்காய் பல இடத்தில்
பாடசாலை பல அமைத்து
காலம் பூராய் பலதொண்டு
சாலப் புரியும் சபையோரே!

தொழில் வளம் பெருக்கப்பல உதவி
மகிழ்வாய்ச் செய்யும் மாண்பினரே
வழி பலகூறி வளம் பெருகப்
பாதை வகுக்கும் பண்பினரே!

அம்மா அப்பா போல் எமக்கு
அரிய உதவி செய்து வரும்
அறவழிப்போராட்டக் குழுவே
வாழ்க வாழ்க பல்லாண்டு!

திருமதி உஷா செல்வஜோதி
சமரபாகு—'பி'

## அகதிகள் முகாம் இடமாற்றம்

யூலை மாதம் 1ம் திகதி முதல் கைதடி வெளிக்கள நிலையத்தில் இயங்கி வந்த கிளிநொச்சி அகதிகளுக்கான எமது அகதிகள் முகாம், இம்மாதம் முதல் கைதடி—நுணுவில் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமில் தற்போது 33 குடும்பங்கள் தங்கியுள்ளனர். இம்முகாமிற்குரிய தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை நிதி உதவி அளித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கலாச்சார நிகழ்ச்சி

கெற்பேலி, செல்வநகர், கள்ளிநகர், கைதடி மத்தி போன்ற கிராமங்களில் நடைபெறும் அறவழி பாலர் கழகங்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் இம்மாதம் 9ம், 10ம் 11ம் திகதிகளில் நடைபெற்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூளைசாலிகள் வெளியேற்றம்

ஒரு நாட்டில் உள்ள மூளைசாலிகளான பொறியியல் வல்லுநர். வைத்திய நிபுணர்கள், முகாமை விற்பன்னர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர், தொழில்நுட்ப வல்லுநர், ஆசிரியர்கள், நிலஅளவையாளர் போன்ற பல துறைகளிலும் பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்கள் அந்த நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு உழைத்து ஊதியம் பெற்று சம்பாதிக்கும் நோக்கமாக வெளியேறுவதால் அந்த நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்படுமாயின் இந்த வெளியேற்றத்தை மூளைசாலிகள் அகல்வு அல்லது அறிவாளிகள் வெளியேற்றம் என்பர்.

சாதாரணமாக மேலே கூறப்பட்ட பல்துறை வல்லுநர் ஒரு நாட்டில் அளவுக்கு மிஞ்சி இருப்பனுல் அவர்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் தங்கள் தாய்நாட்டை விட்டு வேலையின்மை காரணமாக வெளியேறினுல் இதனை மூளைசாலிகள் வெளியேற்றம் என்று ஒரு பிரச்சனையாக கருதுவதில்லை. மிதமிஞ்சி நிபுணர்கள் இருக்கிறார்கள் இதனுல் வேலைவாய்ப்பு இல்லாததால் வேலைதேடி இவர்கள் போவதனுல் அந்த நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்படாது இவர்கள் வெளியே போய் உத்தியோகம் செய்வதால் நாட்டில் வேலையில்லாப் பிரச்சனை குறையும். அந்நிய செலவாணி சம்பளமாக நாட்டுக்கு வரும். ஆகவே இவ்வாறன சூழ்நிலையில் மூளைசாலிகள் வெளியேற்றம் ஒரு பிரச்சனையல்ல.

ஆனுல் மூன்றும் மண்டல நாடுகளான வளர்முக நாடுகளில் தொழில் நுட்ப அறிவின்மை ஒரு மாபெரும் குறைபாடு நாட்டை முன்னேற்ற வளம் உண்டு ஆனுல் தொழில் நுட்ப வல்லுநர்கள் இல்லாததால் நாடு பின் தங்கி நிற்கின்றது. இந்த நிலையில் உள்ள மூளைசாலிகளான பொறியியலாளர் வெளியேறினுல் நாட்டு முன்னேற்றம் பாதிக்கப்படும்.

மூளைசாலிகள் வெளியேறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் சுயநலம் தேசாபிமான உணர்வும் இன்மையே ஆகும். வளர்முக நாடுகளில் பொருளாதார நெருக்கடி காரணமாக ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கும். அறிவாளிகள் பொதுவாக பணக்காரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களுக்கு குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, குளிர்பெட்டிகள், மின்விசிறிகள், வாகனங்களில் மோகம் அதிகம். இவர்களிடம் பணமும் உண்டு. எனவே தங்கள் செல்வத்தால் இவைகளை வாங்கி அனுபவிக்க அவர்களுக்கு அளவு கடந்த ஆசை அரசாங்கத் தடை காரணமாக இப்பொருட்கள் வாங்கி அனுபவிக்கமுடியாத இவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வேறுநாடுகளில் உத்தியோகம் பெற்று உயர்ந்த சம்பளத்தையும் வாங்கி இடாம்பீக வாழ்வை அனுபவிக்க அவர்கள் வெளியேறுகிறார்கள்.

இதற்கு உதாரணமாக 1970-ம் ஆண்டு S.L.F.P பதவியேற்றவுடன் இறக்குமதித் தடை உத்தரவு பிறப்பித்தது. இதைத் தொடர்ந்து பல துறைகளில் உள்ள மூளைசாலிகள் வெளிநாடுகளில் உத்தியோகம் பெற்று வெளியேறினுர்கள்,

சீ. எஸ். சுப்பிரமணியம,
(வளர்ந்தோர் கல்வி அதிகாரி)

தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வி பயிலச் சந்தர்ப்பத்தைப் பெறவும், சர்வகலாசாலையில் இலகுவில் புகுந்து படித்துத் தேறிப்பட்டம் பெறவும் திறமை மட்டும் ஒரு காரணியாக வெளிநாடுகளில் இருக்கிறது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சர்வகலாசாலைக்குச் செல்வதற்கு திறமையை விட்டு இனமத அடிப்படையிலும் பின்தங்கிய மாவட்ட அடிப்படையிலும் அனுமதி வழங்கப்படுகிறது. இந்த அறிவாளிகள் தங்கள் பிள்ளைகளுடைய உயர் கல்விக்காகவும் அவர்கள் எதிர்காலத்தில் படித்தும் வேலை இல்லாமல் இங்கு இருந்து துன்பப்படாமலும் இருப்பதற்காக மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறுர்கள்

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அறிவாளிகள் வெளியேறுவது அதிகம் இவர்களுக்கு தங்கள் நாட்டில் எதிர்காலம் இல்லை. அரசியல் காரணத்தால் இவர்கள் பாதிக்கப்படுகிறுர்கள். கல்வி உத்தியோகம் போன்ற துறைகளில் இவர்களுக்கு எதிர்காலம் இல்லை. ஆகவே வேறுநாடுகளில் சென்று தாமும் தம் பிள்ளைகளும் நல்லமுறையில் சீரும் சிறப்புமாக வாழ முடியும் என்பதற்காக வெளியேறுகிறுர்கள்.

மூளைசாலிகள் வெளியேற்றம் வறியநாடுகளிலிருந்து செல்வநாடுகளுக்கு நிகழ்கிறது இதற்கு வேறும் ஒரு காரணம் உண்டு. வறிய நாட்டில் வழங்கப்படும் சம்பளத்தைவிட செல்வ நாட்டில் சம்பளம் குறைந்தது 30 அல்லது 35 மடங்கு அதிகமாக

( 6-ம் பக்கம் பார்க்க )

## அகதிகள் நிதியம்

எம் பிரதேசங்களில் அன்றுடம் இடம்பெறும் அனர்த்தங்களால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் அறவழிப்போராட்டக் குழு நிரந்தர அகதிகள் நிதியம் ஒன்றினை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது.

இந்நிதியத்துக்கு உதவ விரும்பும் அன்பர்கள், நண்பர்கள், நிதிஸ்தாபனங்கள், மேலதிக விபரங்களுக்கு குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காந்தியின் கருத்துக்கள்

(1) என்பால் அன்பு சொரிதற்கரிய உண்மைநெறி தகுதியுடைய என்னுடைய நல்ல செயல்களை மேற்கொண்டு ஒழுகுதலே ஆகும்.

(2) பிறர் என்னைக் கொல்லலாம்; ஆனால் காந்தீயத்துவத அவர்களால் கொல்லமுடியாது. உண்மையை கொல்லமுடியுமானால் காந்தியத்தை கொல்ல இயலும் அகிம்சையைக் கொல்லஇயலுமானால் காந்தியத்தை கொல்லமுடியும். உண்மை அகிம்சை ஆகிய இவற்றின்மூலமாக உரிமை பெறுவதன்றோ காந்தியம்.

(3) துன்பத்தில் உதவுவதே சிறந்த நட்புமுறை அதுவும் பயன் கருதாமல் உதவுதல் வேண்டும்.

(4) நாட்டில் தாய்மொழியில் அல்லது வேற்றுமொழியில் கல்விபெறும். குழந்தைகள் தம்முடைய அழிவைத் தாமே தேடிக்கொள்கிறார்கள் என்று நான் உறுதியாகச் சொல்வேன் அம்முறை அவர்களது பிறப்புரிமையைப் பறிக்கிறது.

(5) வன்முறை எதுவுமின்றி பொதுவுடமை ஏற்படுமாயின் அது வரவேற்கப்படும். ஏனெனில் அப்பொழுது நாட்டின் உடைமையை மக்களின் சார்பாக மக்களுக்காக ஒருவர் பயன்படுத்துவதேதவிர அவ்வுடைமை எந்த ஒரு தனிமனிதனுக்கும் உரிமையுடையதாக இராது.

(6) மனிதனுக்கு கடமையின் நெறியைக் காட்டும் ஒழுங்குமுறையே நாகரீகம் கடமையைச்செய்வதும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதும் ஒன்றுக் கொன்று பொருத்தமானவை. ஒழுக்கத்தை மேற்கொள்வதென்பது நம் மனத்தையும் நம் விருப்பங்களையும் அடக்கி ஆள்வதாகும். அப்படிச் செய்வதில் நம்மையே நாம் அறிந்தவராவோம். நாகரீகம் என்ற சொல்லுக்கு நல்ல நடத்தை என்பதுதான் பொருள்.

தொகுப்பு; உதயன்.

## மீனவர் குடும்பத்துக்கு நிதி உதவி

மண்டைதீவு நடுக்கடலில், கறுப்புச் சட்டைக்காரர்களால், கொடூரமாகக் குத்தியும், வெட்டியும் கொலை செய்யப்பட்ட 30 மீனவர் குடும்பத்துக்கும் அறவழிப்போராட்டக்குழு நிதி உதவி அளிக்க முடிவு செய்துள்ளது.

இந்நிதி கையளிப்பு வைபவம். இம்மாத இறுதியில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறவழி பிரார்த்தனைக் கழகம்

யோகம், தியானம் இவற்றிற்கு அடுத்த நிலையில் மக்கள் எல்லோரும் ஈடுபடக்கூடிய ஒரு மன சாதனை இருக்கிறதென்றால் அதுதான் பிரார்த்தனை பிரார்த்தனைக்குத் தெய்வம் வேண்டும் என்பதில்லை, ஆனால் தெய்வீகம் வேண்டும். ஓர் ஒருமைப்பட்ட உணர்வு, ஆழ்ந்த நம்பிக்கை தேவை "நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் செய்கின்ற பிரார்த்தனை நோயாளிகளின் உயிர்களை மீட்கும்.''

பிரார்த்தனையின் சக்தியை மக்கள் உணர உதவும் பொருட்டும் பிரார்த்தனையின் மூலம் மக்கள் மத்தியில் தெளிவு நிலை, விழிப்புணர்வு, நம்பிக்கை உருவாக்கும் எண்ணப்பாங்குடன் அறவழிப்போராட்டக் குழு, கிராமங்களில், அறவழிப்பிரார்த்தனைக் கழகங்களை உருவாக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

இப்பிரார்த்தனைக் கழகங்கள் மூலமும் மக்களை நல்வழிப்படுத்தி, தமிழ்சமுதாயத்திற்கு நல்ல பணி செய்வதே அறவழிப்போராட்டக் குழுவின் நோக்கமாகும்.

பிரார்த்தனைகள் பற்றிய துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு மக்கள் மத்தியில் விநியோகம் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# கிணற்றினுள் நஞ்சு கலப்பு

காரைநகர் பகுதியில் இருக்கின்ற ஊரிப் பிரதேசத்தில், சமூக அந்தஸ்து, உரிமைகள் குறைந்த மக்கள் எனக் கருதப்படுபவர்களால் பாவிக்கப்பட்டு வந்த ஒரே ஒரு நன்னீர் கிணற்றில், சில சமூக விஷமிகளால், திட்டமிட்டு நஞ்சு ஊற்றப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

நஞ்சூட்டப்பட்ட நீரைப் பாவித்ததன் காரணமாக பல அப்பாவி மக்கள் நோய் வாய்ப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இச்சம்பவத்தினையிட்டும் இதன் பின்னணியில் திட்டமிட்டு இயங்கியவர்களின் சமுதாய விரோத செயல்பாடுகளையிட்டும் தமிழ்சமுதாயம் வெட்கித் தலைகுனியவேண்டியுள்ளது.

மக்கள் பாவிக்கின்ற நன்னீர் கிணற்றில் நஞ்சு கலப்பது எவ்வளவு பாவச்செயலாகும்.

கிணற்றில் நஞ்சு கலப்பது, குப்பை கூளங்களை கிணற்றினுள் வீசி, மக்கள் பாவிக்கின்ற நன்னீரை அசுத்தப்படும் செயல்கள் கண்டிக்கப்படவேண்டியவையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்க்கை நெறி

— ஜீவன்

தியானத்தைப்பற்றியும், மனத்தை ஒருமுகப் படுத்துவதுபற்றியும் இப்பிரபஞ்ச பெருஞ்சக்தியுடன் மனத்தால் ஐக்கியமாவது பற்றியும் பேசும்போது நம் மவர்கள் 'இது எனக்கு இப்போது தேவையில்லை. இது சாமிப்போக்கிற்கு அடையாளம், ஆரம்பம் என்று பலவாறு தீர்ப்புக் கூறுகின்றனர்.

உண்மை அதுவல்ல. தியானம், யோகம், மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சி பற்றிய அறி யாமையே முக்கிய காரணமாகும். இதேபோன்று நம்மவர்கள் பலர் பல்வேறுவிதமான அறியாமை உணராமைகளால் தம்மைச் சிறைப்படுத்திக்கொண்டு சமுதாயத்தில், தம்மைச்சுற்றியும் வேலிகள் போட் டுக்கொண்டு வாழ்ந்து வருவதை நாம் அனுபவரீதி யாகக் காணலாம்.

மனத்தை ஒருமுகப்படுத்தும் தியானமார்க்கங் களைப் பயிற்சி செய்வதன்மூலம் நாம் நமது பல பிரச் சனைகளுக்கு வழி காணலாம். அன்றாட வாழ்வின் நெருக்கடிகளைச் சமாளிக்கலாம். நேர்மையும் அன்பும் கலந்த ஓர் ஒருமைப்பாடு நம் உள்ளே உலவுவதால், நம்மிடையே ஒரு கற்புநெறி தோன்றுகிறது. நம்மால் முடியாத நமக்கு மேற்பட்ட காரியங்களையும் இத ஞல் எளிதில் சந்திக்கமுடிகிறது.

ஒருமையுடன் உறவுகொள்ளும் தியானப் பயிற்சி பற்றிப் பேசும்போது, நம்மவர்கள் ஏதோ துறவியின் வாழ்க்கையையும் மனோபாவத்தையும் மேற்கொள்வ தன் மூலமே இதை நிறைவேறமுடியும் என்று தவருக எண்ணுகின்ருர்கள், மனப்பயிற்சியையும், நல்லொழுக் கங்களையும், சிந்தனைகளையும் அன்ருட வாழ்வில் கடைப்பிடிக்க முயல்வதில் உள்ள கஷ்டங்கள் அவர் களுக்குப் புலப்படுகின்றன. இதனுல் மனிதன் இரு வேறு உலகத்து வாழ்வை நடத்துகிருன்,

கோயில், குளம், மதம், மதச்சடங்குகள் விர தங்கள் என்று வரும்போது புனித மனோபாவம். அதை விட்டு அன்ருட வாழ்விற்கு வரும்போது அந்தப் புனிதத்தன்மையை அறவே விட்டுவிட்டு "இது ஏமாற்று உலகம். —வஞ்சக உலகம்,—நன்றியில்லாத உலகம்"—என்ற மாறுபட்ட மனோபாவம். கறைபடிந்த உலகம் என்று சொல்லிக்கொண்டு அவனும் கறை படிந்த மனிதனுக இறங்கிய நிலையில் வாழ்கின்ருன்.

"நமது சொல்லும் செயலும் ஒன்றைப்பற்றி யொன்று செல்லவேண்டும்" என்ருர் மகாத்மா காந்தி.

நம்மவர்களில் எத்தனை விகிதத்தினர் இவ்வாறு வாழ்கின்ருர்கள்.

நமது புனித உள்ளம்—கோயிலில் உள்ளபோது எழும் தெய்வீக உணர்வு எவ்வளவுக்கெவ்வளவு நமது அன்ருட நடைமுறை வாழ்வில் இறங்கிக்கலக் கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நமது வாழ்க்கை சம மடையும்; உறுதிபெறும். தெய்வீகம் நாள் பூராவும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும்—சொல்லிலும் வெளிப்படும்.

அப்படி வாழ்க்கை நடத்துபவர்களையே காந்தி என்கிருேம், அன்னை தெரேசா என்கிருேம். அத் தகையவர்கள் எமது சமுதாயத்திற்கு மிகவும் அவ சியமாகத் தேவைப்படுபவர்கள்.

மனிதன் நல்ல எண்ணத்துடன் முயலவேண்டும். செயல்படவேண்டும். தவறுகளுக்காகக் கரைந்து கொண்டிருக்கக்கூடாது, தவற்றை உணர்ந்து அடுத்த முறை செய்யாதவாறு தற்காப்புகொள்ளவேண்டும்.

மனித வாழ்க்கை ஒரு தொடர்ந்த பரிசோதனை போராட்டம். ஒவ்வொரு சமயமும் நாம் அச்சோதனை யில் வெற்றி காண முயலவேண்டும். முதலில் பல முறை தவற நேரிடும், நாளாக ஆக பின் தவறுகள் குறைந்து பல முறை வெற்றிகாண வழி பிறக்கும். சோதனைகளில் அதிக முறை வெற்றி பெறும்போது அது நம்முடன் நமது பழக்கமாகத் தங்கிவிடுகிறது. எல்லாவற்றிற்கும் அடிப்படை மனப்பழக்கம்தான்.

நாம் நம்மீதே அதிகம் கருணை காட்டுவதில்லை. ஒவ்வொரு முறையும் தவறு செய்யும்போது நம்மைச் சித்திரவதை செய்துகொள்கிருேம். நம்மைப்பற்றி நாமே தீர்ப்புக் கூறிவிடுகிருேம். இதை மனம் நம்ப ஆரம்பிக்கின்றது. பிறகு அதுவே எப்போதும் தவறு செய்யும் போக்கிற்கு வழி காட்டியாய் அமைந்துவிடு கிறது.

மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப்பற்றிப் படிக்கும்போது—அவரும் நம்மைப்போன்ற மனிதர் தான் என்பதை உணரவேண்டும், நடைமுறை வாழ்க் கையை எப்படி வாழ்ந்தார் காந்தி என்பதை நுணுக்க மாக ஆராயும்போதுதான் நமக்குப் படிப்பினைகள் அனுபவங்கள் புலப்படும்.

காந்தியிடம் மகத்தான லட்சியம் இருந்தது அதற்கும் மேலாக அந்த லட்சியங்களை அடைய ஒரு வாழ்க்கை நெறி இருந்தது. வாழ்க்கை நெறி இல்லாத எந்தப் பெரிய லட்சியத்தையும் நாம் அடையமுடி யாது. அவரது வாழ்க்கை நெறி இவ்வுலக இயக்கத் தின் மாருனஉண்மைகளில் இருந்து பெறப்பட்டவை அந்த நெறிகள்:

—மனத்தை ஒருமுகப்படுத்தும் பிரார்த்தனை.

—உயிர்கள் எல்லாம் சமம்.—

வாழ்க்கை புனிதமானது என்ற நம்பிக்கை.

—வாழ்வின் பயன் பிறருக்குத் தொண்டுபுரிவதே,

—இவ்வுலகம் பரஸ்பர ஈடுபாட்டில் இயங்குகிறது என்ற உணர்வு,

இந்த வாழ்க்கை நெறிகளை நாமும் எமது வாழ் வில் கொஞ்சம் கொஞ்சமாகக் கடைப்பிடிக்க முய லும்போது நமது அன்ருட நடைமுறை வாழ்க்கையில் ஒளி வீசி, மணம் பரப்பி, தெய்வீக வாழ்க்கையாக மாறும்.

தமிழத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத்தின் தேசிய பானம்

(முன் தொடர்ச்சி)

பதப்படுத்தபபட்ட பாளைகளினைச் சீவுவதின் மூலம் மிகவும் இனிப்புச் சுவையுடையதும் நல்மண முடையதுமான சுவைநீர் பெறப்படும். ஆனல் இச் சுவைநீர் நேரம் செல்லச் செல்ல காற்றில் உள்ள "ஈஸ்ற்'' எனும் நோதியத்தின் தாக்கத்தாலும் சூழ் வெப்பநிலையினலும் சுவை நீரில் உள்ள இனிப்புச் சுவையுடைய "சுக்குரோசு'' எனும் இனிப்புத்தன்மை இரசாயனத் தாக்கத்திற்கு ட்பட்டுப் புளிப்புச்சுவை யுடைய ''கள்'' ஆக மாறுகின்றது. இவ்இரசாயன மாற்றத்தினைத் தடுக்கும் வகையில் பதநீர் சேகரிக்கும் மண் கலயங்களில் பனைத்தொழில் வல்லுனர்கள் நீறிய சுண்ணும்பினைப் பூசிக் காரஊடகமாகச் செய்வதன் மூலம் பதநீர் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

பதநீரைச் சிலர் போதை தரக்கூடிய ''கள்'' என்று தவறுதலாகக் கூறுகின்றார்கள் இதனல் பலர் பதநீரைப் பருகுவதற்குப் பயப்படுகின்றார்கள், பத. நீரில் போதை தரக்கூடிய சத்துக்கள் ஏதும் இல்லை ஆனல் உடலுக்கு ஊட்டமும் சத்தும் தரும் பல் வேறு உயிர்ச்சத்துக்கள் உள்ளன என்பதை பின்வரும் பகுப்பாராய்வு மூலம் அறிந்துகொள்ளலாம்,—

6 அவுன்ஸ் பதநீரில்

| | | |
|---|---|---|
| 1. | காரத்தன்மை | 7.2 |
| 2. | மொத்தச்சக்கரை | 28.8 கி. |
| 3. | சுண்ணும்பு சத்து | 35 4 மி. கி. |
| 4. | இரும்புச்சத்து | 5.5 ,, |
| 5. | பொஸ்பரஸ் | 32.4 ,, |
| 6. | தயாமைன் | 82.3 ,, |
| 7. | ரிபோபிளேவின் | 44'4 ,, |
| 8. | அஸ்கோபிச் அமிலம் | 12,2 ,, |
| 9. | நிகோடினிக் | 674.1 ,, |
| 10. | புரதம் | 49.7 ,, |
| 11. | கலோலிகன் | 1l3.3 ,, |

மேற்குறிப்பிட்டவாறு உள்ள பதநீரை டாக்டர் கே. வ. பான்ஸே என்பவர் பள்ளிக்குழந்தைகளுக்குத் தொடராகச் பல வாரங்கள் வழங்கியதன் மூலம் பத நீர் அருந்திய பிள்ளைகளுக்கும் பதநீர் அருந்தாத பிள்ளைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டினை அவதானித்த வகையில் பின்வரும் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டார்.

1. பதநீர் குடித்த பிள்ளைகளின் நிறையும், உயரமும் குடிக்காத பிள்ளைகளிலும் பார்க்கக் கூடியிருந் தது.
2. காது, கண்களில் நீர் வடிந்து கொண்டிருந்த குழந்தைகளுககுப் பதநீர் கொடுத்தபின் நீர் வடிதல் நின்றுவிட்டது.
3. படர்தாமரை எனும் சருமநோயுள்ள குழந்தை கள் பதநீர் அருந்தியபின் சுகம் கண்டார்கள்.
4. இரத்தச் சோகையுள்ள குழந்தைகள் பதநீர் அருந்தியபின் நோயின் தாக்கம் குறைந்து காணப்பட்டது.

(வளரும்)

# மூளைசாலிகள் வெளியேற்றம்...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

இருக்கிறது. இதைவிட வீடு, வாகனம் இலவச மருந்து வசதி மேலதிக வேலைக்கு சம்பளம் வழங்கப் படுவது மாத்திரமல்லாமல் இப்படி போனவர்கள் மேலும் தாங்கள் படித்து மேலோங்க அல்லது முன் னேற அல்லது ஆராய்ச்சி செய்ய போதிய வசதியும் உண்டு. வேலையும் சுகம் இலங்கையில் ஒரு வைத்தி யர் குறைந்தது 60 (ஒருநாள்) நோயாளர்களைப் பார்வை இடவேண்டும். ஆனல் இங்கிலாந்தில் 5 தொடக்கம் 7 பேரை மட்டும் ஒருநாளில் பார்வை யிட்டால் போதுமானது.

மூளைசாலிகள் வெளியேறுவதால் நாட்டின் பொரு ளாதாரம் பாதிக்கப்படுகிறது. முன்னேற்றம் தடைப் படும். நாடு பின் தங்கிய நிலையிலேயே இருக்கும். துரித முன்னேற்றம் அடையாது.

மூளைசாலிகள் வெளியேறுவதால் சிலசிறு நன்மை கள் நாட்டுக்கு ஏற்படவும் கூடும், இவர்கள் உழைக் கும் பணம் அந்நிய செலாவணியாக நாட்டுக்கு கிடைக்கும்.

சமீபகாலத்தில் இடைநிலை வேலையாட்களும் வெளி யேறுகிறார்கள். தச்சர், மேசன், மின்தொழிலாளி, பைப்வேலை செய்வோர் சாரதிகள் போன்றவர்கள், இவர்கள் இல்லாமலும் வேலைகள் திட்டங்கள் துரித மாகவும் செய்யமுடியாமல் எமது நாடு தவிக்கிறது

மூளைசாலிகள் வெளியேற்றத்தைப்பற்றி ஆராய்ந்து திட்டமிடல் திட்ட அமுலாக்கல் திணைக்களத்தின் புள்ளிவிபரம் பின்வருமாறு உள்ளது.

புள்ளிவிபர, அடிப்படையில் மூளைசாலிகள் வெளி யேற்றத்தை ஆராய்ந்தால் எமது நாட்டின் இழப்பு எளிதில் விளங்கும். 979 ஆண்டில் 174 வைத்தியர் கள் நாட்டை விட்டுச் சென்றனர். அதன் பின் சரா சரி மாதம் 11 வைத்தியர்கள் வெளிநாடுகளில் வேலை கிடைத்து செல்கிறார்கள். இவர்கள் சராசரி மாதம் 26,700 ரூபா தொடக்கம் 32,700 வரை வெளிநாட் டில் சம்பளம் பெறுகின்றனர்.

1979ம் ஆண்டு 440 பொறியியலாளர் நாட்டை விட்டுச்சென்றனர். இதே ஆண்டு 700 கணக்காளர் வெளிச்சென்றனர்.

257 விரிவுரையாளர், 188 முகாமையாளர் 174 சிறு மருத்துவப் தொழில்நுட்ப வேலையாளர் வெளி யேறியுள்ளனர்.

எமது நாடு ஒரு வளர்முக நாடு, எமக்கு அபி விருத்தி மிக அவசியம், இந்த நிலையில் பொறியிய லாளர், நிலஅளவையாளர், வைத்தியர்கள் போன்ற மூளைசாலிகள் வெளியேறினல் நாட்டின் அபிவிருத்தி ஸ்தம்பித்துவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாட்டின் லூதர் கிங்

கிங் அவர்களின் மறைவின் பின் அவரின் கல்லூரி முதல்வர் டாக்டர் பெஞ்சமின் ஈமேய்ஸ் அவர்கள் இரங்கலுரை நிகழ்த்தினர்கள். பலர் தம் மனதில் எண்ணிய கருத்தினை, அவர் வரர்த்தைகளில் வடித்தார். ''பிரித்தானிய சாம்ராஜ்யத்திற்கு எந்த ஆயுதமும் இன்றி காந்தி எவ்விதம் எதிர்த்து வெற்றிகண்டாரோ அவ்விதமே மாட்டின் லூதர் கிங் அவர்களும் தனது நாடாகிய அமெரிக்காவில் நிலவிய இனங்களுக்கிடையிலான அநீதிகளைத் துப்பாக்கியின்றி எதிர்த்து நின்ருர். சமூக நீதி வேண்டி தான் நடத்திய போரபட்டத்தில் தான் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை கொள்வதற்கான இறை விசுவாசம் அவரிடம் இருந்தது'' என்ருர்.

காந்தி 1930ம் வருடம் அராபியக் கடற்கரை ஓரங்களில் 200 மைல் நடந்து சென்று இறைவனின் சமூகத்தில் உண்டாகும் உப்பை எடுப்பேன் என்று உலகின் மாபெரும் சாம்ராஜயத்துக்கெதிராக அறிவித்தார். இந்தியா முழுவதும் மின்சாரத்தினுல் தாக்குண்டதுபோல் அதிர்ந்து போயிற்று. நூற்றுக் கணக்காஞேர் கைதுசெய்யப்பட்டனர். ஆயினும் பொலிசாரின் வன்முறைக்கெதிராக எவரும் எதிர்த்து வன்முறைகளில் ஈடுபடவில்லை.

1956ல் மாட்டின் லூதர் கிங் தலைமையில் நீக்கிரோ பிரஜைகள் ''மொன்ற கொமெறி நகரத்தில் பொது போக்குவரத்து பஸ் வண்டிகளைப் பகிஷ்கரித்த முதல் வெற்றிகண்டார். அந்த வேளையிலும் இந்தியாவில் ஏற்பட்டது போன்றதோர் மின்சார தாக்கம் அமெரிக்கா முழுவதிலும் அதே உற்சாகத்துடன் ஏற்பட்டது. அன்று தொட்டு அமெரிக்க நீக்ரோக்கள், சமத்துவம் என்னும் பாதை நோக்கி அணிதிரண்டு நடைபொட்டு வருகின்ருர்கள். சில வேளைகளில் இந்த நாட்டை பின் நின்று இழுப்பவர்களால் தடைப்படுகின்றது. சில வேளை இவர்கள் நடைமாற்றம் ஏற்படாததினுல் பொறுமையிழந்த நிலை அடைகின்றது.

அலபாமா மாநிலத்தில் காட்ஸ்டென் என்னும் இடத்தில் தாக்கப்பட்டுச் சினங்கொண்ட நீக்ரோ குழுவினர் வன் செயலில் ஈடுபட முனைந்தார்கள் கிங் அவர்களிடம் ஆயுதங்களைப் போடுமாறு கேட்டுக் கொண்டார். ''அறவழி'' என்னும் ஆயுதத்தை எடுங்கள் நேர்மை என்னும் மார்புக் கவசத்தை எடுங்கள்.

சத்தியம் என்னும் கேடயத்தை எடுங்கள்...... என்று புரிந்தனர் அதைக்கேட்டவர்கள் அதற்கு இணங்கினுர்கள்.

''அவரிடம் கர்வம் இல்லை. தான் ஒரு விவேகி என்ற குடைபிடிப்பு இல்லை'' என்று நியூயோக் ரைம் பத்திரிகை 1961ல் எழுதியது. அவர் வெள்ளையருக்கெதிராக, அவரைத் தாக்கியபோதும் வார்த்தைகள் பேசவில்லை. (வளரும்)

# ''தமிழரின் கல்விபற்றி சித்தித்தவர் பேராசிரியர் நேசையா

— கலாநிதி நந்தி

''அறவழிப் போராட்டக்குழு இரு விழாக்களைப் பொருத்தமாக ஒன்று சேர்ந்திருக்கின்றது. அறவழி பாலருக்குப் பரிசளிக்கும் விழா ஒன்று—அறவழி வாழ்ந்த மதிப்பிற்குரிய தமிழ் மகனுக்குப் பாராட்டு வழங்குவது இன்ஞென்று. ஒரு விழாவினுல் எமக்கு மனத்தில் மகிழ்ச்சி உண்டாகிறது. மற்றவிழா எமக்கு மகிழ்ச்சிமட்டுமல்ல பெருமையும் தருகிறது.''

''பாலரின் கல்வியிலே எமது மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது, இதை நாம் உணர்கிருேம். நாம் பாலராக இருந்த காலத்தில் அதாவது 40—50 வருடங்களுக்கு முன்பு, எமது கல்வியை பற்றி ஆக்க பூர்வமாகச் சிந்தித்தவர் ஒருவரை நாம் இன்று பாராட்டுகிருேம்.''

''பேராசிரியர் நேசையா கல்வியைப்பற்றிமட்டுமல்ல, நமது சுதந்திரம். அதிலும் கல்விச் சுதந்திரம் நமது தனித்துவம். நமது சமூக அமைப்பு—நமது கலாச்சாரம்—மொழி—தன்னம்பிக்கை இவையெல்லாம் பற்றிச் சிந்தித்தவர்.''

''சிந்தித்தது மட்டுமல்ல. பல விதங்களில் செயலில் காட்டியவர். செப்பமாக எழுதியவர் National Educational of Society of Ceyl0n என்ற சங்கத்தின் சஞ்சிகையில் அவர் எழுதிய கட்டுரைகள் கருத்துமிக்கவை எனக்கருதப்பட்டது. அவர் தனது பேச்சு, எழுத்து, நடை, வாழ்க்கை முறை எல்லாவற்றிலும் எமக்கு ஒரு சீரிய பாதையைக் காட்டியவர். இந்த நாட்டின் கல்விச்சரித்திரத்திலே அவரது பெயர் பெருமையுடன் பொறிக்கப்பட்டிருக்கும்.''

''கல்வியின் பலாபலன் மனித முன்னேற்றத்தின் சகல மேம்பாடுகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும். அதேபோல் பேராசிரியர் நேசையா கல்வியுடன் தனியே நிற்காது வேறு இயக்கங்களுடன் சம்பந்தப்பட்டவர். 1930ம் வருடங்களில் இளைஞர்காங்கிரஸ் எனும் வாலிப அமைப்புடன் ஈடுபட்டவர். இந்திய நாட்டு சுதந்திர எழுச்சியுடனும் அதை வழி நடாத்திய காந்தியக்கொள்கைகளுடனும் தன்னை அடையாளம் கண்டவர்'' ''பேராசிரியர் நேசையாவுக்கு ஒரு உறுதுணையாக கிறிஸ்தவம் இருந்தது. இன்ஞெரு உறுதுணையாக தமிழா நாகரிகம் இருந்தது. கைகொடுப்பதற்கு அவரது ஆங்கில நாவண்ணம் இருந்தது வழிவகுக்க கல்வித்தொழில் இருந்தது. இந்த வசதிகளையெல்லாம் தக்கமுறையில் உபயோகித்து சர்வகலாசாலை மட்டுமல்ல, அரசியல் இயக்கங்களும் பொதுமக்கள் அமைப்புகளும் பயனடைய தனது திறமையைப் பகிர்ந்தளித்தார்.

(வளரும்.

www.tamilarangam.net



# அறவழி NONVIOLENCE

## "அறவழிப் போராட்டம் மூலமே எதிர்ப்பைக் காட்டலாம்"

"83-ம் ஆண்டு யூலையில் இந்த நாட்டில் இடம் பெற்ற இனப்படுகொலை, மற்றும் கலவரம் காரணமாக, பாதுகாப்பும், புகலிடமும் தேடிவந்த மக்களுக்கு வடபகுதியில் முதல் முகாம் அமைத்து சேவை செய்தோம். அக்காலப்பகுதியில் முகாமில் இருந்த மக்களுக்கு அறவழியின் பொருள், தன்மை, போராட்ட முறை போன்றவற்றினைப் புகட்டியதன் காரணமாக இன்று நீங்கள் அறவழி ரீதியிலான போராட்டத்தினைத் தொடர்வது பாராட்டுக்குரியது."

இவ்வாறு அறவழிப் போராட்டக்குழுவின் கல்வி இயக்குனர் திரு. வீ. எஸ். துரைராஜா, மறவன்புலவு அகதிகள் வீடமைப்புத் திட்டத்தில் யூலை 25ம் திகதி யன்று நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தின் போது பங்கு கொண்டு உரையாற்றினார்.

திட்ட மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உண்ணாவிரதத்தில் நூற்றுக்கு மேலான மக்கள் பங்கு கொண்டிருந்தனர்.

குழு இயக்குனர் திரு. எஸ். தங்கராசா அங்கு பேசுகையில், "அறவழி ரீதியிலான போராட்டங்கள் மூலமே மக்கள் தமது முழுமையான எதிர்ப்புக்களை ஆட்சியாளர்களுக்கும், உலக நாடுகளுக்கும் காட்ட முடியும்" என்றார்.

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் உப தலைவர் திரு. சண். காளிதாஸ் உரையாற்றும் போது, "1983ம் ஆண்டு யூலையில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக நாம் எமது பொருளாதார வளத்தினை இழந்தபோதிலும்கூட, தமிழ்மக்கள் மத்தியில் காணப்படும் ஆதரவு, அன்பு, கருணை எம்மை உளரீதியில் செல்வம் மிக்கவர்களாக்கியுள்ளது" என்றார்.



பட விளக்கம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் குழு நடாத்திய பேராசிரியர் கு. நேசையாவின் பட்டமளிப்பு கலாசார நிகழ்ச்சிகளின்போது எடுக்கப்பட்ட படங்கள்,
இடமிருந்து வலம் — உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராசிரியருக்கு கதராடை போர்த்திக் கௌரவித்தல், வண. எஸ். சர்வானந்தா அடிகள், பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜீ. பரராஜசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும், சிறுவர்களின் கலாச்சார நிகழ்ச்சியையும் காணலாம்.

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1986 ஆடி 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்